வெளியீடு எண் 392

# கிளி விடு தூது

பதிப்புரிமை ] 1957 [ தருமபுர ஆதீனம்



தருமபுர ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

# கிளி விடு தூது

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-ஆவது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அவர்கள்

அருளாணையின்வண்ணம் வெளியிடப்பெற்றது.

பதிப்புரிமை ] 1957 [ தருமபுர ஆதீனம்

முதல் பதிப்பு: 1938
இரண்டாம் பதிப்பு: 1957

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# அணிந்துரை

---

கிளி விடு தூது என்னும் ஈது, தருமபுர ஆதீனத்து 8 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பலதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைக் குறித்து, சோர்க்கபுர மடாலயத்தைத் தோற்றிய ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது. இந்நூல் தருமை ஆதீனத்தின் முதல் வெளியீடாக 1938 இல் அச்சிடப்பெற்றது. வெளியிடப் பணித்தருளியவர்கள் ஷெ ஆதீனத்து 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். அவர்களது அருளாணையைப் போற்றி ஏற்று, அக்காலத்தில் ஒடுக்கத்தில் இருந்தவர்களும் இக்காலத்தில் அருளாட்சி புரிபவர்களும் ஆகிய 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், தருமை

ஆதீனத்து வித்வசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களைக்கொண்டு, பதிப்பிக்கச் செய்தருளி னுங்கள். இது தருமையாதீனத்தின் இரண்டாவது வெளியீடு. பழம் பதிப்பின் முன்னுரை பின்னுரைகளும் அவ்வாறே இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. அவை பிற்காலத்தில் வரலாற் ருராய்ச்சிக்குதவும். இதனை முன்னர் வெளியிடப்பணித் தருளிய சண்முக குருமணியின் விழாமலராக மீண்டும் வெளிவரச் செய்தருளிய எங்கள் குருநாதர் திருவடிகளை என்றும் மறவாது போற்றுங்கடப்பாடு சைவத் தமிழ்மக்கள் எல்லார்க்கும் உண்டு.

வாழ்க குருமணி ! வளர்க சைவ நலம்!

அடியன்

தருமபுர ஆதீனம்
1—6—57

முத்து. சு. மாணிக்கவாசகன்,
ஆதீன வித்வான்.

உ

சிவமயம்

குருபாதம்

# 24 ஆவது குருமணியின் ஆட்சி நலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரஆதீனம் 24ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 26—6—1933 இல் அருளாட்சி பெற்றார்கள். இவர்கள் இளவரசுபுரியத் தொடங்கியதுமுதல் தமிழகம் எங்கும் சைவசித்தாந்த மணம் பரவி மக்களை மகிழ்விக்கின்றது. தமிழ்நாடு மெய்கண்ட சாத்திரப் பெருமையை அறிந்து ஆராய்கின்றது; தருமையாதீனத்து ஞானசாத்திரங்களைப் பெரிதும் அச்சிடுவித்து வழங்கப்பெறு கின்றது; பல்வேறு சமயக் கருத்துக்களையும் அறிகின்றது; சம்பிரதாய நூல்களைக் கற்கின்றது. பலமொழிகளில் பல நாடுகள் சமயநூல்களைப்பெற்றுக் காண்கின்றன.

ஆதீன மடாலயத்தின் ஒருபால் ஞானநூற் பதிப்பகம், ஒருபால் கலைமகள் விளக்கமான பெரியதொரு நூலகம், ஒருபால் புலவர்கள் போற்றிப் புகுந்துவாழும் ஆராய்ச்சி யகம் ஒருபால் சிற்பக்கலைதிகழும் சித்திரகூடம், ஒருபால் சமய குரவர் நால்வர் தளிகளும் சந்தானகுரவர் நால்வர் தளிகளும் வடமொழியும் தென்தமிழும் ஓதும் கல்லூரி ஆக விளங்குகின்றன. வடபால் வேதாகம பாடசாலையும்

திருமுறைப் பாடசாலையும், ஆதி குருநாமத்தோடு திகழும் தொடக்க உயர் பள்ளியும் நிலவுகின்றன. தென்பால் ஒரு சிங்காரப் பூம்பொழில். அவர்கள் திருவுள்ளக் கிடையாக மெய்கண்டான்மாநாடு சைவசித்தாந்த வகுப்பு, சமயப் பிரசாரச் சொற்பொழிவுகள், திருநெறிமன்றத்தின் தனித் தொண்டுகள், திருமுறை முதலியவற்றின் வெளியீடுகள், திருக்கோயில் திருப்பணிகள், மகாகும்பாபிடேகங்கள், தானதருமங்கள், வித்வத்சம்பாவனைகள், ஆதீனப்புலவர் கள் நியமனம், வெளியூர்களிற்கற்கும் ஏழை மாணவர் களுக்குச் சம்பள வுதவிகள் பரிசுகள் முதலிய பற்பல நன்மைகள் உண்டாயின.

"ஞானசம்பந்தம்" என்னும் திங்கள் வெளியீடு உலகெலாம் ஓத உலவுகின்றது. சுருங்கச் சொல்லின் தருமையின் பெருமை யெல்லாம் இக்குருமணியின் அருமைப் பண்புகளே யாகும் என்ற ஒரு தொடராகக் கூறலாம். இன்னோரன்ன பல சைவ நலங்களைத் தந்த குருமணியின் அருட்டிருமேனி, அன்பர் உளத்தாமரை யிலும் உலகெலாம் பரவிய புகழுடம்பிலும் நின்று நிலவுக.

அடியன்,

முத்து. சு. மாணிக்கவாசகன்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# முதற்பதிப்பின் முன்னுரை

உய்வள மிகுத்த தருமையா தீனத்
தோங்குமேட் டாவது பட்டத்
தெய்வநற் குரவன் மாண்பினைச் சொலுமித்
திருத்தகு நூலிவண் யார்க்கும்
கைவரும் வகையி லச்சினி லேறக்
கருணைசெய் தவர்தரு மைக்கண்
சைவமுந் தமிழுந் தழைக்கவந் தமரும்
சண்முக ஞானதே சிகரே.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 24வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளம் மகிழும் வண்ணம், கிளிவிடுதூது என்னும் இந்நூலை காழி வித்வசிகாமணியும், இவ்வாதீன வித்வானுமாகிய திருவாளர் முத்துத்தாண்டவ ராயப்பிள்ளை அவர்களால் பரிசோதிக்கப்பெற்றது. மெய் கண்ட சந்தானத்து உமாபதி தேவநாயனார் தமது ஞானாசாரி யர்மீது நெஞ்சு விடு தூது என்னும் நூலை இயற்றியருளியது போல, இவ்வாதீனத்துப் பரமசீடரும், சொர்க்கபுர மடா லயத்தைத்தாபித்தவரும் ஆகிய அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் என்பார் தமது ஞானாசாரியரும் தருமபுர ஆதீனத்து எட்டாவது மகாசந்நிதானமும் ஆகிய அழகிய திருச் சிற்றம்பல தேசிக ஞானசம்பந்த சுவாமிகளின் மீது இந்

நூலைப்பாடி அருளிச்செய்தார். திருத்தேவாரம் முதலிய தெய்வ மறைகளில் இங்ஙனம் கிளி முதலியவற்றைத் தலைவியர் தூதாக அனுப்பி வருதல் காணக்கூடும். தருமபுர ஆதீனத்தின்கண் குருமூர்த்திகளாக எழுந்தருளி வரும் மகானுபவர்கள் யாவரும் ஸ்ரீ கைலாசபதியாகிய ஸ்ரீகண்ட பரமேஸ்வரரது அனுக்கிரகத் திருக்கோலங் கொண்ட குருஞானசம்பந்த மூர்த்திகள் என்பதும் அன்னார் தமது சந்நிதிக்கண் அதிதீவிர பக்குவம் அடைந்த உத்தம மாணவர்களுக்கு உண்மை ஞானனுபவத்தை ஆராய்ச்சி ஞானத்தாலும், அனுபவ ஞானத்தாலும் தெரிவித்துப் பாச நீக்கத்தையும், சிவத்துவ விளக்கத்தையும் இன்னின்ன முறையில் பரிபாலித்து வருகின்ருர்கள் என்பதும், இந்தக் கிரமத்தால் மெய்கண்ட பரம்பரையைச் சேர்ந்த இத் தருமபுர ஆதீனம் சத்திய ஞான பீடமாய் இலங்குவது என்பதும், இவ்வாதீனத்து 4-வது மகாசந்நிதானமாகிய மாசிலாமணி ஞானசம்பந்த சுவாமிகள்மீது குமரகுருபர சுவாமிகள் இயற்றி அருளிய பண்டார மும்மணிக் கோவையிற்போல, இவ்வாதீனத்துத் தமது குருமூர்த்திகள் மீது இந்நூலாசிரியர் பாடியருளிய இக் கிளி விடு தூது இவ்வாதீனத்து ஞானுசாரிய சுவாமிகள் அனைவரும் நான்கு வகை சத்திநிபாதத்தையும் அடைந்த உத்தமர்களுக்குச் சரியையாதி சிவதருமங்களையும் சிவஞானத்தையும் பரிபாலித்து அருள்செய்வதுமன்றிச் செந்தமிழ் வளர்ச்சியையும் அதன் மூலம் செம்பொருள் உண்மைச் சிவானுபவத்தையும் பிரசாதித்து வருகின்ருர்கள் என்பதும் இந்நூலால் தெள்ளிதிற் புலப்படும்.

ஒரு நாட்டின் உன்னத நிலையை அறிவதற்குக் கருவியாயிருப்பன அந்நாட்டின் கலைகளே. கலைகளே ஒரு நாட்டின் உயிராயிருப்பன, தமிழ்நாட்டின் உயிராய் நின்று

அதனைப்போற்றிவரும் கலைகளாகிய இலக்கியங்களோ பலப்பல எண்ணிறந்தனவாகிய இலக்கியங்களை நம் முன்னோரிற் சிலர் தொண்ணூற்ருறுவகைப் பிரபந்தமெனத் தொகைப்படுத்தினர். இவற்றுள் தூது என்பதும் ஒன்று. இது பொருட்டொடர் நிலைச் செய்யுளாகிய விருந்தின்பாற் படும். தூதாவது காமம் மிக்க காதலி ஒருத்தி காதலன் மாட்டு உயர்திணைப் பொருளையேனும் அஃறிணைப் பொருளை யேனும் தூதாகஅனுப்பித் தன் குறையை முடித்துவரச் சொல்லுவது. இது பாட்டுடைத்தலைவன் பெருமையையும் தூதிற்குரிய பொருளின் தன்மையையும் விவரித்து உவமை உருவகம் முதலிய அணிகளை அமைத்துக் கலிவெண்பா விஞல் கற்றுவல்ல புலவரால் பாடப்படுவதாகும். தூதிற் குரிய பொருள்களில் கிளியும் ஒன்றேன்பது:-

இயம்புகின்ற காலத் தேகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநேஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை.

என்னும் இரத்தினச் சுருக்கச் செய்யுளான் அறியலாம். இவைகளேயன்றி வேறு சிலவற்றையும் தூதுவிட்டதாகப் பாடிய நூல்களும் உள்ளன. அவை தமிழ்விடுதூது, வனச விடுதூது நாரைவிடுதூது, நெல்விடுதூது, துகில்விடுதூது, பணவிடுதூது முதலியன. மற்றும் அன்றில், இருள்வாசி, குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி முதலிய பூக்களையும், நாகணவாய்ப்புள் புறவு பொன் முதலியவற்றையும் தூதிற் குரிய பொருளாக வைத்துப் புலவர் பாடியுள்ளார். கிளி முதலிய அஃறிணைப்பொருள்கள் சொல்வதற்கும் கேட்ப தற்கும் உரியன அல்லவேனும் உரியனபோல் வைத்துச் சொல்வது இலக்கிய வழக்கு. இதனைக் ''கேட்குநபோலவும்

கிளக்குநபோலவும் அஃறிணை மருங்கினும் அறையப் படுமே" என்பது வலியுறுத்தும். இது பிரிவாற்றுமை குறித்து வருந்தும் தலைவி தன் வருத்தத்தைத் தணித்துக் கோள்வதற்கு ஒரு சாதகமுமாகும். இது புறத்திணையில் கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம் என்னும் துறையின்பாற்படும்.

இந்நூல் தமிழுலகத்திற்கும் சைவ உலகக்திற்கும் பயன்பட இயற்றிய பெரியார் சொர்க்கபுரம் அழகிய திருச் சிற்றம்பல தேசிகராவார். இவர் சோணுட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள திருவம்பர் மாகாளத்தைச் சேர்ந்த மாகாள இலந்துறை என்னும் சிற்றூரில் சோணுட்டு வேளாளர் குலத்தில் கி. பி. 17-ம் நூற்ருண்டின் இறுதியில் அவதரித்தனர். இவர் இளமையிலே போதிய கல்வியும் அறிவும் பெற்றுத் தருமபுர ஆதீனத்து 7-வது பட்டத்திருந்த திருவம்பல தேசிகர்பால் கோட்டூர் அழகிய சிற்றம்பல தேசிகர் தாயுமானவர் ஆகிய இவர்களோடு தாமும் ஒரு சீடராய் ஞான நூல் பல கற்று வந்தார். திருவம்பல தேசிகர்க்குப் பின் இவர் 8-வது பட்டத்திருந்த கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகரையே ஞானசாரியராகக் கொண்டு அன்னுர்மீது முதல் முதல் கிளிவிடுதூது என்னும் இந்நூலைப் பாடியருளினுர். பின் ஞானசாரியர் திருவாணைப் படி சொர்க்கபுர மடத்துத் தலைவராயிருந்து நிட்டைகூடி விளங்கினுர்.

இவரது மகிமையைக் கேள்விப்பட்ட தஞ்சாவூர் மகாராஷ்டிர அரசர் பாபுசாகிபு ஏகோஜி II அனேக பூஸ்திதி களையும் இவருக்குக் கொடுத்துள்ளார். தஞ்சாவூர் மகா ராணி ஸுஜாணுபாய் கி. பி. 1737-ல் அடிகள் நிஷ்டையி லிருக்கும் கோலத்தைக்கண்டு தரிசித்து அருள் பெற்ற

தாகக் கனுக்கண்டு பரவசமுற்று மாகாள இலந்துறைக்கு நேரில் வந்து தரிசித்து சொர்க்கபுர மடத்திற்கு மானியங்களும் அளித்து உள்ளார். இதுபோல பலரால் விடப்பட்ட நிலங்களும் மானியங்களும் இன்றும் உள்ளன. இவரைக் குருவெனக்கொண்டு அருள் வழிப்பட்டோர் நாகை வடிவியாரும் அழகியாரும் என்ற பெண்களும், இவர் இளவலாகிய வைத்தியலிங்கத் தம்பிரானும் (1), பாயிரம் பாடிய அகரக் கோந்தை சுப்ப நாயனும் ஆவார்.

இவர் அறிவானந்த சமுத்திரம், கிளிவிடுதூது, வினுவுரை, திரி பதார்த்ததீபம், சித்தாந்த நிச்சயம், அனுட்டான விதி, உசாத்தானத் தோத்திரம், அருட்பாமாலை என்னும் நூல்களை அருளிச்செய்து விபவஸூ (1748-A. D.) கார்த்திகை மாதம் புனர்வசு நட்சத்திரத்தில் பரிபூர்ணமானர்

இதனை இயற்றியோர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் என்பது அறிவானந்த சமுத்திரத்திற் கூறும் இவர் பிரபாவத் தானும், தாயுமானவர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் ஆகிய இவர்கள் நூலுக்கு அகரக்கோந்தை சுப்பநாயனர் இயற்றியருளிய

வள்ளலெனத் தமிழ்மாரி வழங்குமருள் வாயான்
மாகாள மிலந்துறையில் வருபரம குரவன்
தெள்ளுதமிழ்க் கிளிவிடுதூ தாதியாய்ப் பலநூல்
செய்துபல நாமநிலை செய்துதொகை செய்தே
விள்ளரிய மெய்க்குருவைச் சீடனு னவனும்
வினுவிமகிழ் தலுங்கூறி யறிந்தழுங்கல் விளம்பி
அள்ளிமகிழ்ந் துணவறிவா னந்தசமுத் திரமு
மரியதிரி பதார்த்ததீ பமுமருளி னனே. 72

என்னும் பாயிரச்செய்யுளானும், இந்நூல் இறுதி வெண்பாவி ஞனும் புலனுகின்றது. மேலும் இந்நூல் 8-வது பட்டத் திருந்த கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் மீது பாடப்பெற்றுள்ளதென்பது இந்நூல் காப்புச்செய்யுளானும்

"வேதா கமவொலியும் மூவர்பா விள்ளொலியும்
நாதாந்தஞ் சென்ருேர் நடத்தொலியும்-கோதில்
திருவா சகவொலியுஞ் சென்றுகட லோசை
பொருவாக வென்றும் போ தும்-பெருவாழ்வு
சேர்த்த தருமைதனிற் சே தாளிம்ரன் போலுருவம்
சார்ந்து பலகலைகள் சந்தமும்-தேர்ந்தவன்பா
சம்பந்த நீக்கவரு சற்குருவா மெய்ஞ்ஞான
சம்பந்த னென்னவோர் பேர்தாங்கி-எம்பந்தம்
நீக்குமெல்லை பார்த்திருந்து நேர்ந்தவுட னென்னையழைத்
தாக்கினுன் றன்க ணருளேக்கம்," (18-22)

"விண்ணவர்போற் றுந்தருமை மேவிமுனர்
சொல்லியதோர் அண்ணல்," (127)

என்னும் சில கண்ணிகளானும் தெளிவாகிறது.

இந்நூலாசிரியர் தம்ஞானுசாரியர் மீது தம்மை ஆட் கொண்ட வரலாற்றைக் கிளி வாயிலாகச் சொல்லுவதன் மூலம் தமது வரலாற்றையும் அவர் பிரதாபத்தையும் நன்கு எடுத்துரைத்துள்ளார். திருக்கயிலாய மலைமேவும் சிவ பிரான் தம் திருவுருக் கரந்து அன்பர்களை ஆட்கொள வேண்டி மெய்ஞ்ஞான சம்பந்தர் என்னும் பேர் பெற்றுத் தமக்கு ஞானுசாரியராக வந்தார் எனவும், அவர் தமக்குப் பேரின்பம் அளித்தற்கு அறிகுறியாக அவர் மாலையை வாங்கிவா எனவும் கிளியைத் தூதுவிடுத்தனர். இவர் தம்

குருவின்பாற் கொண்ட அன்பின் பெருக்கே செய்யுளாக வெளிப்பட்டதாகும். புத்தம் புதிய சொற்றொடரமைப்பும் உவம உருவகத்தோற்றமும் இதன்கண் செவ்வனே திகழ்ந்துள்ளன. தம் குருவை,

மலினஉடை மூன்றினையும் மாற்றியின்பமென்னும்
கலைமுழுதும் போர்த்தகா ருண்யம் (50)

போக முழுதும் பொருளல்ல வென்றருளில்
தாகம் எழுப்புதற்கோர் சஞ்சீவி (56)

துன்பக் கடலுட் டுளைந்தமிழ்ந்திச் சோர்வேனை
இன்பக் கடலமிழ்த்து மேகாந்தம் (61)

கூறுதற்கொன் றில்லா குணமிலகு நாடதனில்
எறவரு ளேணிகொடுத் தேற்றியது (71)

அற்றவிடத் தன்றி யகலிடத்தும் வானிடத்தும்
மற்றெவ் விடத்துமிலா மாணிக்கம் (85)

வீடாப் புலப்புனத்தை வெட்டியருள் வித்திட்டுத்
தேடா விளைந்ததொரு தெய்வீகம் (87)

பவமணங்கள் சற்றுமெட்டிப் பாரா தகற்றிச்
சிவமணங்கொண் டுள்ளுலவுந் தேறல் (97)

எத்திக்கு மெவ்வுலகு மெங்கெங்குந் தானாகித்
தித்தித் திருக்கும் சிவபூமி (106)

எனக்கூறும் உருவகமும்,

"என்புநிறை, சேரியினிற் செங்கழுநீர் பூத்ததுபோல்"

"கருங்கற் பிசைந்து கனியாக்கல் போல்" (88)

"ஆணியற்ற தேர்தான் அலைந்ததுபோல் (103)

என்பன போன்ற உவமையும் பார்ப்பவர் மனதைப் பரவசப் படுத்தாமலிரா. மேலும் தம் குருநாதற்குரிய மலை முதலிய தசாங்கங்களை உருவக வாயிலாகக்கூறியது மிகவும் போற்றத்தக்கது. தமிழ் மணத்தோடு சாத்திரமணமும் தழுவியுள்ளதனுல் இது தமிழ்ப்பயிற்சி யுடையார்க்கும் சாத்திரப் பயிற்சி யுடையார்க்கும் மிக்க பயனைத்தரும்.

இவரது தெய்வீகத் தன்மையையும், இயற்கைக் கவியின் வன்மையையும், சாத்திரப்புலமையையும் இவர் இயற்றிய அறிவானந்த சமுத்திரம் என்னும் நூலில் காணலாம்.

இத்தகைய நூல் வேளிவர திருவருள் நோக்கம் புரிந்த திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 24 வது பட்டத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கட்குத் தமிழுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

மழவிடையா னனந்த வாரியிலே
படிந்தருளை வாரி வாரிப்
பழமறையா கமப்பயிர்கள் படர்ந்தோங்க
வருணீரைப் பாய்ச்சிப் பாய்ச்சித்
தழலனைய பிறப்பிறப்பிற் ருழுமுயிர்ப்
பயிர்க்கருளைத் தந்தாட் கோள்ளும்
அழகியசிற் றம்பலவ னடியிணையை
யனுதினமு மகத்துள் வைப்பாம். (97)

L. M. C. ஹைஸ்கூல்,
சீர்காழி.
21—8—'38.

வித்வான், D. சுந்தரேசன்,
தமிழாசிரியன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# கிளி விடு தூது

காப்பு

நேரிசை வெண்பா

ஐய னழகியசிற் றம்பலசம் பந்தன்மேல்
துய்ய கிளிவிடுதூ தோதுதற்குக் — கையினிள
மானையெடுத் தானடிய ரூனமறுத் தானளித்த
ஆனைமுகத் தானைநினைப் பாம்.

கலிவெண்பா

பூங்கமல மேலயனும் புள்ளின்மேல் விண்டுவுஞ்சேன்
றூங்குகீழ் நாடி யுணர்வரியோன் — தேங்கமழுங்

கொன்றைதும்பை கூனமதி கூவிளந்தண் வன்னியெருக்
கென்றுமக லாதணிந்த வெம்பிரான் — வென்றிபுனை

காமனுரு வேவநுதற் கண்விழித்துக் கையுகிரான்
பூமன் சிரசிலொன்று போக்கினான் — மாமனர

சிங்கவடி வைத்தடிந்து சிம்புளாய் வந்துசம
ணங்கமிட றிக்கடிந்த வண்மையோன் — கங்கை

யலையிலலை யும்வேணி யையனன்ப ரன்பின்
வலையி லகப்படுமோர் வள்ளல் — தலைமாலை

பூண்ட பிரமன மேசன் புராதனனற்
றுண்டவ மாடுந் தனிமுதல்வன்—காண்டற்

கரியா னனுமேய மல்லா னுரைக்கு
மரியா னெவர்க்கு மரியான்—பரியார்

மனத்திருளாய் நின்ற மறையோன் பரியு
மெனக்கருளாய் நின்ற விறையோ—னனைத்துலகாய்

நின்று னிறைந்தா னினைந்தாயு மன்பருன்
கொண்டா னவர்க ளுளங்குன்றுன்—வண்டார்

பொழிலேய்ந் திரைதேரும் பூங்கிளியே மிக்க
வெழிலார் மொழியையியம் பக்கேள்—இழிவாய

காய மெடுத்துழன்று காலன்கை யிற்படுமுன்
மாயை மலங்கன்ம மாமாயை—தூய

திரோதாயி யைந்தினையுந் தீர்த்தெனக்கு மேலாம்
பரபோக மூட்டும் படிக்குத்—திரமான

அங்கத்தின் மானுந் தலைமானுங் கைமானுந்
துங்கச் சடையுஞ் சுடர்மழுவுங்—கங்குனிகர்

கண்டக் கறையுந் தமருகமுங் காற்கழலுந்
துண்டப் பிறையுமுழு வைத்தோலும்—வெண்டலையும்

பன்றி மருப்பும் படநா கமுமெலும்பும்
வென்றி புனைமூ விலைவேலும்—புண்டரிகக்

கண்ணனற் கண்ணும் நுதற்கண்ணும் போரேறுந்
தண்ணருங் கொன்றையிவை தாங்கரந்து—வண்ணப்

பிரமாண்ட வோடு பிளப்பபோற் செல்லுந்
தருவார் பொழில்கள்சூழ் தந்து—திருவாரும்

வேதா கமவோலியு மூவர்பா விள்ளோலியும்
நாதாந்தஞ் சேன்றோர் நடத்தோலியுங்—கோதில்

திருவா சகவோலியுஞ் சென்றுகட லோசை
போருவாக வேன்றும் போருந்தும்—பேருவாழ்வு

சேர்ந்த தருமைதனிற் சேர்ந்தோளிரேன் போலுருவஞ்
சார்ந்து பலகலைகள் சந்ததமுந்—தேர்ந்தவன்பா

சம்பந்த நீக்கவரு சற்குருவா மேய்ஞ்ஞான
சம்பந்த னேன்னவோர் பேர்தாங்கி—வேம்பந்த

நீக்குமேல்லை பார்த்திருந்து நேர்ந்தவுட னேன்னையழைத்
தாக்கினான் றன்க ணருணோக்கம்—வாக்கின்

மோழிகுழறிக் காறளர்ந்து மூச்சேறிந்து முன்னே
விழிபோழிய மேய்புளக மேய்தித்—தழுதழுத்து

மோகித்து நின்றேன் முகமலர்ந்து தானிரங்கித்
தாகித்தா யேன்று தகவுடையோ—னூகித்திட்

டாகமுத லாசைமுற்று மற்றனைநீ நல்லபரி
பாகியேன்றான் போதப் பதைப்பேல்லாம்—போகத்

தரையிற் பணிந்தேன் றலையின்மாக் கைவைத்
துரையுந் திரையு நுரையுங்—கரையுமிலா

மேலாஞ் சிவானுபவ வேலைதனின் மூழ்குதற்கு
மாலானா யேன்று மனமகிழ்ந்து—நூலாலே

சோன்னபடி சேய்யத் தோடங்கியுட லும்போருளு
நின்னையுந்தா வேன்று நிகழ்த்தினா—னன்னபடி

யீந்தேன்றன் பாத விணைமலரேன் புன்றலைவைத்
தாழ்ந்தார்க ளாலு மறிவரிய—காய்ந்த

பயிரினுக்கு மேகமது பாலித்தாற் போலென்
னுயிரினுக்குச் சொன்னா னொருசொல்—தயிரினுக்குள்

மத்தினைப்போ லலைந்து மலத்தாற் சுழன்றதொரு
சித்தமத னாற்கேட்டுச் சிந்தித்து—வைத்துத்

தெளிந்துகிட்டை யெய்தினேன் சேர்ந்தமல் சத்தி
விளிந்துசெல வாங்கே விளைந்த—துளைந்த

பவத்தீய கல்லொருபா காகத்தந் தன்றிச்
சிவத்தே னளித்திருந்த தெய்வம்—உவப்பிற்

பிடிக்கப் பிடிக்குமன்றிப் பெருமிந்த வாயால்
படிக்கப் படாதவருட் பண்பு—பிடிக்கநீ

சும்மா விருவெனவே சொல்லி வருமமுத
மம்மாவெம் போதத்தா லாய்ந்துண்ண—வெம்மால்கள்

கொன்றாலும் வாராக் கொழுந்தேனோ ரைம்புலனும்
வென்றாலும் வந்து விளைவறியா—தென்றாலும்

துட்டநாய் போன்ற துகளென் னுளத்துவந்து
கிட்டியது கிட்டாத கேண்மையே—கட்டிவிடா

நோயும் விளையுடலும் நுங்கியுளச் செய்முழுதும்
பாயும் வடிவமொரு பாலாறு—நேயமுட

னோங்கி யெழுந்துளத்தி னோடி மனமழியத்
தேங்கிவடி கின்றதொரு தேனாறு—நீங்காது

பாராமற் பார்த்தயர்ந்த பக்குவத்தி னோடிவந்து
நேராம னேர்ந்ததொரு நெய்யாறு—தீரா

துருகித் திரிவிதமா லோடி யொருமால்
பெருகப்பெ ருகும்பே ரின்பந்—திரியுமுள

மாடாம னின்றாலு மன்பு மிகுத்துருகித்
தேடாமல் வாராத தெள்ளமுதம்—வாடி

யோடியாப் புலனைந்து மோட்டியபின் வாயாற்
கடியாம லுண்ணவந்த கன்னல்—வடியாத

ஊற்றுமணல் போலுருக்கி யுண்ணெகிழ்ப்பித் தவ்வழியே
தோற்றுகின்ற வின்பச் சுகநேயம்—நோற்றுநின்று

வாணா ளுலவாமுன் வாவென் றயர்ந்தேற்குக்
காணாமற் காட்சிதந்த கற்கண்டு—கோணாய

தீர்ப்பரிய யானெனது தீரா தவரெல்லாம்
பார்ப்பரிய தெய்வப் பனியாறு—பார்த்துகந்து

தட்டாம லுள்வாங்கித் தாக்காமற் றாக்கியெனக்
கெட்டாம லெட்டவந்த வின்பவெள்ளம்—விட்டுக்

குறியாக் குறிப்பைக் குறிக்கொண்டு நின்றங்
கறியா தறியுநல் லானந்தம்—பிறியாது

சேராமற் சேர்ந்து தெளிந்துநின்றா லக்கணமே
வாராமல் வந்துலவும் வாணாறு—தீரா

மலினவுடை மூன்றினையு மாற்றியின்ப மென்னுங்
கலைமுழுதும் போர்த்தகா ருண்யம்—உலைவைத்

துருக்க வுருக்க வொளிவிடும் பொன்போ
லிருக்க விருக்கவொளி ரின்பஞ்—சுருக்கமிலாப்

பந்தவுட லும்விளையும் பாழிருளும் போயகல
வந்துலவுந் தூண்டா மணிவிளக்கு—நொந்தறிவு

தேயாது பாயாது தேடி யுறும்பொழுது
வாயாது வாய்த்த மலைமருந்து—காயாது

தேடி நோந்து நெஞ்சந் தியங்கி மயங்கும்போ
தோடிவந்து நின்றதோ ருற்சாகம்—நீடியதோர்

பற்றற்ற தின்றிப் பதைப்பற் றிருந்தவுடன்
முற்றத்தி லூறு முழுப்பாகு—பேத்தத்தில்

போக முழுதும் பொருளல்ல வென்றருளிற்
ருக மெழுப்புதற்கோர் சஞ்சீவி—பாகமுறத்

தான்றமுவ நான்றமுவத் தானெதிர்க்க நானெதிர்க்கத்
தேன்றிகழத் தான்றிகழுஞ் செய்யகனி—யூன்றியங்குத்

தூண்டாமற் றூண்டிநின்று தோயாமற் றேயவதிற்
றேன்ருமற் றேன்றுஞ் சுகவாரி—காண்டற்கு

நண்ணரிது நண்ணரிது நாடரிது நாடரிது [ணக்
நுண்ணுணர்வி னுண்ணுணர்வி னுண்ணுணர்வு-வண்

கிரியைக்கும் யோகுக்குங் கேட்டறெளி தற்கும்
வருதற் கரியபெரு வாழ்வு—பெருகியதோர்

துன்பக் கடலுட் டுளைந்தழுந்திச் சோர்வேனை
யின்பக் கடலமிழ்த்து மேகாந்த—மென்புநிறை

சேரியினிற் செங்கழுநீர் பூத்ததுபோ லென்னுள்ள
வேரியின்ப வாரியெழுந் தெய்தியது—சீரியதோர்

வேதங் கடந்ததற்கு மேலாகி யேநின்ற
நாதங் கடந்ததொரு நல்லவெளி—போதமின்றி

யுய்வேமோ வுய்யேமோ வென்றுருகி நின்றவென்
னையந் தணிக்கவந்த வன்பாழி—வெய்யபவ

கேதமே வந்து கெடாம லெனைவளர்த்த
போத மறுத்துகந்த போரேறு—நீதமுறு

மோன்றன் றிரண்டன் றுருவன் றருவமுமன்
றேன்றேன்று நின்றிலங்கு மின்னமுதம்—நன்றிபுனே

மண்ணன்று நீரன்று தீயோடு வாயுவன்று
விண்ணன்று காலாதி வேறன்றல்—எண்ணினது

ஞாதுருவு மன்றியே ஞானஞே யங்கழன்ற
மேதினியி ஞரின்ப வெள்ளாறு—போதமுற

வோடாம லோடி யுருகி யழைத்தேற்குக்
கூடாமற் கூடுங் குணக்குன்று—நாடி

னுதிப்பீறு நிற்புமிலா வூர்நாடி யோடிப்
பதைப்பறவே வந்தசெந்தேன் பாகு—விதிப்படியே 70

கூறுதற்கோன் றில்லாக் குணமிலகு நாடதனி
லேறவரு ளேணிகொடுத் தேற்றியது—கூறு

மிருட்பே யிரியவெனக் கின்ப மளித்தங்
கருட்பேயின் கைகொடுத்த வன்பு—மருட்செய்

நெருப்பனைய வைம்புலனு நீங்கியளி கூர்ந்தங்
கிருப்பதற்கு நின்றதோரின் னிழல்—வருத்தமுறப்

பாழுக்கு முத்துலையும் பாரித் திறைத்தலந்த
வேழைக்குச் சும்மா விரங்கியது—கோழையேனை

யோண்பகலு மோரிரவு முண்போழுதும் போம்போழுதுங்
கண்படையி னும்பரிந்து கவ்வியது—பண்புடைய 75

தானீர்த்த லன்றியிந்தத் தற்போதங் கோண்டாங்கே
யானீர்க்க வாரா வினியதரு—வூனேற்ற

துன்ப மகலவேனைத் தூக்கி யிருளிடித்திட்
டின்பஞ் சோரியு மெழின்மேக—மன்பா

லுளைப்பார்க் கினியானேன் றாழ்தலைப்பட் டேய்த்தேற்
கிளைப்பாற்றி யின்பூட்டு மெல்லை—களைப்பாறித்

தாக்கற்குப் பேருந் தகர்போல வென்னிடத்தி
ஞுக்கற்குப் பேரு மளியானைப்—பார்க்கி

னிசையா திசைந்தங் கெழாதே யெழுப்பி
யசையா துளவா மலகங்—திசையா 80

ருயர்வு மிழிவு முணர்த்தா துறையு
மயர்வை யறுக்குமின்பா காயம்—பயனில்லாச்

சுற்றுவறி ஞர்க்கனந்தஞ் சொன்னங் கிடைத்ததுபோற்
செற்ற விடத்தெழுந்த தேனேரி—பற்றி

நினைத்து நினைத்துருகி நெக்காம னெக்கி
யனைத்துமொளிக் கும்மிடத்தா தாரம்—வினைப்படியே

சுற்று மனப்பாவை சுட்டறிவு கெட்டறவே
வற்றுமிடத் தோடி வருமுறவு—பற்றுமுற்று

மற்றவிடத் தன்றி யகலிடத்தும் வானிடத்து
மற்றெவ் விடத்துமிலா மாணிக்கங்—குற்றமிலா 85

வானோர்க்கு மண்ணோர்க்கு † மாலயர்க்கு மன்றியிறு
மேனோர்க்கு மெய்தரிய வின்சோதி—யூனுர்ந்து

வீடாப் புலப்புனத்தை வெட்டியருள் வித்திட்டுத்
தேடா விளைந்ததொரு தெய்விகம்—காடார்

கருங்கற் பிசைந்து கனியாக்கல் போலென்
னிரும்பைக் குழைத்தவிள வேனில்—கரும்பான

† மாலயர் - மாலும் அயனும்; பலரீற்றுயர்திணையும்மைத் தொகை.

வன்னைதனி லும்மினிய வையர்தா ளுண்ணிணைந்து
தன்னை மறக்கவந்த சையோக—மென்னறிவால்

தாழாமற் ருழ்ந்து தலைகோடுத்து நின்றேற்கு
வாழாமல் வாழவந்த மாநிதியஞ்—சூழி 90

னிருட்டி னிருட்டை யிகலி னிகலை
வெருட்டி மிரட்டுமின்ப வெய்யி—லரட்டின்றி

நேடிப் பலகா னெறிநோக்கி நின்றுருகி
னூடிப் புணருமின்ப வுல்லாசம்—நீடுஞ்

சகலத்துங் கேவலத்துந் தாக்காமற் றன்ற
னகலத் தேனையிருத்து மன்னே—யிகலுற்றுத்

துன்றியதோ ராறு வகைச்சமயத் தோல்கலையைச்
சென்றும் பறந்துகோலுங் தேறுமுவை—கன்றியதோ

ருள்ளத் திருட்கரியை யோடிப் பிடிப்பதற்குத்
தெள்ளித் தெளிந்தவின்பத் தீமடங்கல்—ஒள்ளியநற் 95

றேத்திரத்தும் பூசையினுஞ் சொல்லுநிய மங்களினுஞ்
சாத்திரத்துஞ் சாரவொட்டாத் தாளாண்மை—பார்த்துப்

பவமணங்கள் சற்றுமெட்டிப் பாரா தகற்றிச்
சிவமணங்கோண் டுள்ளுலவுந் தேற—லுவமையென்று

நாட வரியபிர மாண்டமுத னுதமட்டுந்
தேட வரியதோரு சிங்காரங்—கேடின்றிப்

பேணுதற்கு மென்னைப் பிணிப்பதற்கும் பேரிடமாய்க்
காணுதற்கு நல்லின்பக் கண்ணுடி—வீணின்றிப்

பேசுதற்கு வந்தோருவர் பேசவல் லார்களுடன்
பேசுதற்கெட் டாதிருக்கும் பேராண்மை—வீசுமத 100

யானை யினுங்கொடிய வைம்புலவீ ரங்குலைந்திட்
டூனை யுருக்குமின்ப வுள்ளூறல்—வானாருங்
கஞ்சா சனவரவிற் கட்டவிழ்த்து விட்டோடி
யஞ்சாதிருப்பதற்கோ ரத்தாணி—யெஞ்சாத
வாணியற்ற தேர்தா னலைந்ததுபோன் மும்மலமு
நாணியறப் பண்ணுமொரு ஞானமலை—நீணாகர்
வானோர்கண் மண்ணோர்கண் மற்றுமுள்ள பல்லுயிர்கள்
போனாற்பின் மீளவிடாப் பொன்னுலகு—நானாக
நீளாம னீட்டி நினைவின்வைத்து நின்றேற்கு
மீளாமன் மேற்கொண்ட மெய்யுணர்வு—வாளாரு
மெத்திக்கு மெவ்வுலகு மெங்கெங்குந் தானாகித்
தித்தித் திருக்குஞ் சிவபூமி—பத்தியினால்
பித்தா முழவுழுது பேரன்பாற் கண்பதித்துச்
சித்தாந்தச் செய்பழுத்த தீங்கதலி—யெய்த்துநின்று
நாணும ணணியதோர் நாட்டி னொருவருமே
காணுமற் செய்ததொரு கல்யாணந்—தாணு
விபுவென்ன நாடி மெலிந்தபோ தென்னுட்
குபிரென் றெழுந்தசெந்தேன் கொப்பு—ழகலிடத்து
நில்லாம னின்றெங்கு நேடாம னேடியிட
மெல்லாமல் மெல்ல வருவெல்லம்—பொல்லாத
மண்ணை இரணியத்தை மங்கையரை நீங்கியின்ப
வெண்ணெய் தகவளித்த மேம்படுகோல்—திண்ணமுறப்
பண்டை யிருண்மலமும் பண்டை வினைமலமும்
விண்டு கழித்தேறு மேல்வீடு—பண்டை

யோழியாப் புலனைந்து மோடியபோ தேறி
யிழியாம லேபுகுது மில்லங்—தழுவிப்
புகட்டாம லுள்ளே புகட்டியங்கே யென்றுந்
தேகிட்டாம னின்றதித் திப்புப்—பகட்டுப்
பிரியாப் பிரியமேனும் பேய்க்கணங்க டுன்னுத்
துரியங் கடந்தசுக மேடை—தெரிவரிய
கல்விஎனுந் தீராக் கலக்க முழுதினுக்கு
மோல்கியிளைப் பாறுதற்கோ ருப்பரிகை—சோல்லரிய
வுள்ளும் புறம்பு மோழியா வேளியின்வரச்
சோல்லி யழைக்குஞ் சுகாதீத—மோல்லையே
யூறும லூறி யுளமவிழ்ந்தங் கேயுன்னி
மாறுத வேய்ப்பின் வருவைப்புப்—பேருகத்
தன்னை நினைப் பித்துமரு டன்னையுதிப் பித்துமன்றி
யேன்னைமறப் பித்துமேனக் கேய்தியது—வன்ன
வுருவு மருவுமின்றி யோர்குடியு மில்லாத
தேருவிற் சமைந்தோழுகுந் தீந்தேன்—தேரிவைத்
தேரியாமற் றேர்ந்த திகைப்புமறந் தின்பந்
தரியா துதவுந்தாய் வீடு—தேரிவரிய
சுத்தவருட் பேய்தோடர்ந்து சோரவிட்ட தன்றியேனைப்
பித்தனேனப் பண்ணியதோர் பேரறிவு—நித்தமேனைத்
தானே பிடித்துமுத்தந் தானே வழங்கியதின்
றேனே வருத்துமதற் கேன்சேய்கேன்—ஊனு
ளுருகவோரு நோக்களித்த வுத்தமன்மீ தாசை
பேருகமயல் கோண்டுபித் தானேன்—திருமருவு

கிள்ளையே நீயெனக்குக் கிட்டாது கிட்டுகையா
லுள்ளதெலா மிப்போ துரைசெய்தேன்—விள்ளாத

வுண்மையிதுவாயிடினு முன்னைவிட வேறுருவ
ருண்மையிலை யத்தா லுரைத்தேன்காண்—வண்ணமற்ற

விண்ணவர்போற் றுந்தருமைமேவி முனஞ்சொல்லியதோ
ரண்ணல் சமுகமறிந் தாதரவாய்—நண்ணியவன்

செய்யவடித் தாமரையிற் றாழ்ந்தெழுந்து சேர்ந்துநின்று
கையின்மழு மான்கரந்த கற்பகமே—ஐயனே

மாதர்பொன்பூ வென்னுநகை மாபுலிகட் கஞ்சினோர்
வேதனை தீர்த்தேற்றும் வெற்புடையாய்—கேதநல்கும்

பாசமொரு மூன்றுதொட்ட பங்கமற வேநினைந்தோ
ராசையுடன் மூழ்குமின்ப வாறுடையாய்—தேசுறுநன்

மந்திரத்தோ டாறு வகைகாட்டிப் பட்டதுயர்
நந்தல்செய்து வாழவைத்த நாடுடையாய்—சந்ததமுந்

தாங்கரிய வைம்புலக் கள்வரீர்க் குந்துயர்தீர்த்
தோங்கியிளைப் பாற்றுமின்ப வூருடையாய்—தேங்கமழும்

பங்கயன்சேர் பூமிவை குந்தமட்டு மப்பாலு
மேங்கு மணக்குமிசைத் தாருடையாய்—மங்காது

மாயுமுயிர்ப் பாசப்புண் மாய்த்தழித்துச் செல்வதற்குப்
பாயுமரு ணோக்கப் பரியுடையாய்—நேயமுட

னாயுமைந்து கோசமெனுங் கோட்டையிடித் தைந்துமலங்
காயுங் கருணைக் களிறுடையாய்—வீயாது

பந்தமுற்ற பல்லுயிர்கள் பாசமறுத் துப்பரத்தை
நந்தாம லேகொடுக்கு நற்கொடியாய்—பந்தத்

தழுங்காம னாளு மரணையுன்னீ ரேன்று
முழங்குமறைச் சைவ முரசோய்—வழங்குமனந்
தாவா நவபேதந் தானாய் நடித்தவற்றைக்
கோவாய் நடத்துஞ்செங் கோலுடையாய்—ஓவாத
சீருடையாய் நந்தாத் திறலுடையா யாயிரநற்
பேருடையா யின்பம் பெரிதுடையாய் - ஏருடையாய்
தேனே கனியே தெவிட்டாத தெள்ளமுதே
வானோ ரறியா மணிவிளக்கே—கோனேயென்
கண்ணே கருணைபொழி காரே கருதருநற்
பண்ணே பவவரவின் பற்பட்ட—புண்ணாற
வந்தமருந் தேயென்று வாழ்த்தியொரு விண்ணப்பஞ்
சிந்தை மகிழ்ந்து திருச்செவியி—லெந்தையே
சார்த்தியருளாயென்று சாற்றியவன் றானிரங்கிப்
பார்த்துவிளம் பென்றுவரம் பண்ணியபின்—தீர்த்தனே
மட்டவிழ்பூத் தூய்த்தொழுது மாதவர்சூழ் நின்சபையில்
கிட்டிநின்றந் நோக்கங் கிளர்ந்ததனால்—கட்டியநற்
பஞ்சகலை யுஞ்சோர்ந்து பாசவளை யுங்கழல
வெஞ்சா வனுபவத்துக் கிச்சைகொண்டு—தஞ்சமெனத்
தேம்பிநின்ற போதண்ணல் தேவரீர் சித்தமகிழ்ந்
தாம்படிநல் லின்ப மளித்ததனால்—சோம்பாம
லன்றுமுத லின்றுவரை யவ்வின்ப மேபுசித்து
நன்றுதீ தென்றுசுட்டி நாடாமல்—என்றும்
பிரியாதிருந்து பிரிந்தமையா னெஞ்சங்
தரியா தழுங்கித் தவித்திட்—டெரியு

மேரியிற் போரிகின்ற வேள்ளிளேப்போற் றுள்ளிச்
கருகிமுக மெய்சோம்பிக் கண்ணீர்—பெருக

வழுது புரண்டிங்கே யங்கத்தை நீக்கிற்
பழுதேனவே யேண்ணிப் பதைத்துக்—கழுது

பிடியுண்ட பேர்களேப்போற் பித்தாய் மயங்கி
மிடியுண்டோர் மேவுதுயர் மேவிப்—படியுண்ட

விப்புதுமை யேன்றுகண்டோ ரேல்லா மிகழ்ந்துவசை
சேப்பியிட வோன்றுந் தேரியாதே—வேப்பமுடன்

பஞ்சபுல வம்பாற் பழுத்தவினே வேரேரிய
விஞ்சு துயராய் மிகமேலிந்திட்—டஞ்சியே

மேத்த வருத்தமுற்று வீயாத வன்பினுக்கே
மேத்த விரும்பி விடாய்கோண்டு—சித்தநைந்து

நின்றதைய லுய்யுமா நின்றிருநோக் கம்மளித்து
மன்று ணிறைந்தவருண் மாமலேயே—குன்றுத

பேரின் பமுமளிக்க வேண்டுமேன்று பேசியிப்போ
தார்துன்ப நீங்க வடியேன்சோற்—றேராக்

குறியோன்று காட்டுதற்குக் கோவே கரந்த
வேறிகுன்றுக் கோன்றைவேறி யாக்கி—வறியேன்றன்

கையிற்று வேன்றதனே வாங்கிக் கடிது கோண்டிங்
குய்ய யான் வாரா யுவந்து.

வெண்பா

கலங்காத வுள்ளத்தாற் காணுங் கனியை
மலங்கெடத் தீர்க்கு மருந்தை—இலங்கையுறை
அத்த னழகியசிற் றம்பலசம் பந்தனைச்
சித்தத்துள் வைப்பேன் றினம்.

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவர் மெல்லடி வாழ்க.

குருபாதம்

# குறிப்புரை - விசேடவுரை

காப்பு — ஆசீர்வாதம், நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் என்னும் மூவகை மங்கல வாழ்த்தும் அமைந்துள்ள இவ் விநாயக வணக்கம், ஆன்ரோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டும் மாணுக்கருக்கு அறிவுறுத்தற்பொருட்டும் இந் நூல் இனிது முடிந்து இதனை ஓதுவார் சிவஞானசித்தி யடைதற் பொருட்டும் முன்னர்க்கூறப்பட்டது. இந்நூலின் வரலாறும் இலக்கணமும் பாடிஞேர் பாடப்பெற்ரோர் பிரபா வமும் பிறவும் முகவுரையிற் கண்டுணர்க

இந்நூல் கலிவேண்பாவிஞல் ஆயது. இக் கலிவேண் பாட்டின் சோன் முடிவு வருமாறு :—

அயனும் விண்டுவும் நாடி உணர்வரியோன் 1, உளங் குன்ருன் 9, எனக்குக் கூட்டும் படிக்கு 12, பூங்கிளியே கேள் 10, கைமானும் 13, ........ போரேறும் கரந்து 16, தருமைதனில் 20, பேர்தாங்கி 21, என்னை அழைத்து அருள்நோக்கம் ஆக்கிஞன் 22; மோகித்து நின்றேன்; தான் இரங்கி 24, நீ பரிபாகி என்ருன் 25; பணிந்தேன் 26; மனமகிழ்ந்து 27, தா என்று நிகழ்த்திஞன்; அன்னபடி 28. ஈந்தேன்; தன் இணைமலர் என் தலை வைத்து 29, ஒரு சோல் சோன்ஞன் 30; நிட்டை எய்தினேன்; மலசத்தி விளிந்து சேல விளைந்தது 32; தேய்வம் 33........... .. பேரறிவு எனை 122, பிடித்து முத்தம் வழங்கியது; வருத் தும் என்சேய்கேன் 123, பித்தானேன் 124; கிள்ளையே!

நீ கிட்டுகையால் உரை செய்தேன் 125; உரைத்தேன்காண் 126; (நீ) அண்ணல் சமுகம் அறிந்து நண்ணி அவன் 127, தாமரையில் தாழ்ந்து எழுந்து நின்று கற்பகமே 128, ........வந்த மருந்தே என்று வாழ்த்தி ஒரு விண்ணப்பம் திருச்செவியில் 142, சார்த்தி, அவன் வரம் பண்ணியபின் தீர்த்தனே! 143; நின்சபையில் கிளர்ந்ததனுல் 144, பாச வலையும் கழல இச்சை கொண்டு 145, தேம்பி நின்றபோது தேவரீர் நல் இன்பம் அளித்ததனுல் 146, புசித்து 147 . ......மேவி 151, இப் புதுமை கண்டோர் செப்பியிட வெப்பமுடன் 152, நின்ற தையல் உய்யும்.......மாமலையே! 155, பேரின்பமும் அளிக்கவேண்டும் என்று பேசி, துன்பம் நீங்க, சொல் தேரா 156, குறியொன்று காட்டுதற்கு, கோவே! கொன்றை வெறியாக்கி 157, கையில்தா என்று அதனை வாங்கி யான் உய்ய உவந்து வாராய் எனச் சொல் முடிபு கொள்க.

நூல் - (பக். 1-2, வரி 1-9) பூ என்பது மங்கலமொழி. எல்லாம்வல்ல இறைவன் தமது சிற்சத்தியால் ஆன்மாக்களை உய்வித்தற்பொருட்டுத தோற்றுவிக்கும் நிவிர்த்தி முதலிய கலைகளின் அதி தெய்வமாகிய பிரம விஷ்ணுக்கள் முடியையும் அடியையும் காணுத பெற்றிமையை முன்னர் எடுத்துக் காட்டிச் சிவபெருமானே பரம முதற் காரணர் என்பதை விளக்குகின்ருர். இறைவனது அதிஷ்டானத் திருமேனிகளைத் தவிர ஏனைய தேவர்களால் காணமுடியாத பெற்றியர் மூவகை ஆன்மாக்களுள் சகலர்களைக் காத்தற் பொருட்டுப் படர்க்கையில் ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளாய் எழுந்தருளி வந்து அநுக்கிரகிக்கின்றனர். இதற்குப் பிரமாணம் திருவுந்தியார் — 'அகளமாய் யாரும் அறிவரிதப்பொருள், சகளமாய் வந்ததென் றுந்தீபற, தானுகத் தந்ததென் றுந்தீபற' என்பது. குருஞானசம்பந்தப்

பெருமானே தருமபுர ஆதீனத்துப் பரமாசாரிய சுவாமிகளாய் எழுந்தருளி வந்து மெய்கண்ட பரம்பரையில் இந்த ஞான பீடத்தில் வீற்றிருந்து திருவருட் செங்கோல் நடாத்திவரு வதால், இவ் வாதீனகர்த்தர்கள் தங்கள் ஞானுசாரிய அபிஷேகத் திருநாமத்தோடு ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்னும் அபிதானமுஞ் சேர்த்துப் போற்றப் பெற்று வருகின்றனர். இது தோன்றுதோட்டு வருவதோர் சம்பிரதாயம் என்பது இந் நூலாலும் பிற நூலாலும் ஆதீன கர்த்தரவர்களின் ஆட்சியாலும் விளங்கும்.

பூங்கமலம் - சிற்சத்தி ஆணையால் திருமாலின் உந்தி யிற் பூத்த தாமரை. புள் - கருடன். ஊங்கு கீழ் - மேலும் கீழும், முடியும் அடியும். கூவிளம் - வில்வம். காமனை எரித்தது முதலிய வீரச்செயல்களைப் புராண வாயிலாற் கேட்டுணர்க. உகிர் - நகம். சிம்புள் - சரபம். மா மன் - இலக்குமி தங்கிய. சமன் - யமன். வேணி - ஜடை. தேவர்க்கும் எட்டாத மாதேவராயினும் பத்தர்களது பத்தி வலையிற் படுவோராதலின், அன்பர் அன்பின் வலையில் அகப்படும் ஓர் வள்ளல் என்ருர். தலைமாலை-கற்பகாலத்தில் சங்கரிக்கப்பட்ட பிரமாதிகளின் சிரமாலை. அமரேசன் - தேவர்களுக்குத் தலைவன். புராதனன் - பழையோன். தாண்டவம் - நிருத்தம். பஞ்சகிருத்திய நடனம். காண் டற்கு அரியான் அனுமேயம் அல்லான் உரைக்கும் அரி யான் - பிரத்தியக்ஷம் அனுமானம் ஆகமம் என்னும் மூன்று பிரமாணங்களுக்கும் எட்டாதவன். பரியார் - அன்பில்லா தவர். பரியும் - அன்பு நிறைந்த. ஆயும் - ஆராயும். ஊன்-உடல். கிளியே இயம்பக் கேள் ''எம்பிரான் தருமை தனில் ஞானசம்பந்தராம் என்ன ஓர் பேர் தாங்கி'' எனக் கூறப் புகுகின்ருர். இந்தக் குருஞானசம்பந்தரது பரம் பரையில் எழுந்தருளிய அழகிய திருச்சிற்றம்பல தேசிக

சுவாமிகளையும் அவருக்கு முன்னோர்களையும் இந்நூல ஆசிரியர் இந்நூலகத்துத் துதிக்கும் வண்ணமே இவருக்குச் சமகாலத்தவராகிய தாயுமானவசுவாமி தமது திருப்பாடல் குருமரபின் வணக்கத்தில் ''நாளவங்கள் போகாம னன் னெறியைக் காட்டியேமை-யாளவந்த கோலங்கட்கன்பு வைப்பதெந்நாளோ'' என்று துதித்துள்ளார். (பக். 2-3, வரி 10-23) காயம் - சரீரம்; பரசரீரம் மூன்று; சூக்கும சரீர மொன்று; தூலசரீரமொன்று. அசுத்த மாயையில் அநந்த தேவராற் கலக்குண்ட பாகமாகிய காரண சரீரமென்னும் பரசரீரமொன்று; இது ஆநந்தமய கோச மென்னப்படும். வித்தியா தத்துவங்களாகிய பஞ்சகஞ்சுகமென்னுஞ் சரீர மொன்று; இது விஞ்ஞானமயகோச மென்னப்படும். பஞ்ச கஞ்சுகத்திலொன்றாகிய கலையிற்றோன்றிய அவ்வியத்த வியத்த ரூபமாகிய குணசரீரமென்னும் பரசரீரமொன்று; இது மனோமய கோச மென்னப்படும். மனம் புத்தி அகங் காரந் தன்மாத்திரையைந்துமாகிய சமூகஞ் சூக்கும சரீரம்; இது புரியட்டக மெனவும் பிராணமயகோச மெனவும் படும். ஏனையது தூலசரீரம்; இது அன்னமயகோசமெனப்படும். இவ்வாறு புருடனொருவனே ஐந்து சரீரங்களோடுங் கூடி வினைக்கீடாகப் பிறப்பு இறப்பு அடைவன். பாசம் ஐந்து ஆவன :- ஆணவம், அறியாமை, மிகவுண்டாம்படி ஆன் மாக்க டோறுஞ் சகசமாய் அநாதியாயிருப்பது. திரோதாயி, ஆணவமலத்தோடுங் கூடிநின்று அது பக்குவமாமளவு மான்மாவை மறைத்து அந்த மலத்தைப் பாகம்வருவிப்பது. மாயை ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளைக் கொடுத்து மயக்கத்தைச் செய்விப்பது. கன்மம், ஆன்மாக்கடோறும் விரிந்தனுபவமாய் நிற்பது. மாயேயம், ஆன்மாக்களின் சுக துக்க விளைவுகட்கெல்லாம் இடமாய் நின்று அவற்றின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவது. மாயை - சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என மூன்றாம்.

கன்மம்—சஞ்சிதம் பிராரத்துவம் ஆகாமியம் என மூன்றும். அங்கத்தின்மான் - உமாதேவியார். தலைமான் - கங்கா தேவியார். ஆணவமலமுடைய விஞ்ஞானகலரைத் தன்மையிலும், ஆணவம் கன்மம் இரண்டனையும் உடைய பிரளயாகலரை முன்னிலையிலும் ஆட்கொண்டருளும் பரமேசன் மும்மலங்களையுமுடைய சகலரில் பக்குவருக்கு இருவினையொப்பு மலபரிபாக முண்டாகிச் சத்திநிபாதம் விளைந்தவழி மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோலக் கடவுள் தம் முருக்கரந்து மானிடச்சட்டை சார்த்திக்கொண்டு குருமூர்த்தமாயெழுந்தருளி மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரமறிந்து சமயதீட்சை பண்ணிச் சரியை யனுட்டிப்பித்து, விசேட தீட்சை செய்து கிரியா யோகங்களை யனுட்டிப்பித்து, நிருவாண தீட்சை புரிந்து ஞானமனுக்கிரகித்து மும்மலங்களை நீக்க, ஆன்மாக்கள் மும்மலமும் அழிந்தார்களுமில்லையாய், அந்தச் சிவமுதலானோர்களுமில்லையாய், சிவமுதலின்றிக் காரியப்பட்டார்களு மில்லையாய், அம்முதலுக்கு வேருயிருந்தார்களுமில்லையாய், கேவல விசிட்ட மறுதலை யத்துவிதங்களைக் கடந்து அப்பதியோடு சுத்தாத்துவித நிலையினை யடைவிப்பர். இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். '' தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த'' என்பதும் சிவஞான சித்தியார் '' மன்னும் அருட்குருவாகி வந்தவரின் நீக்கி மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்'' என்பதும்,- இருபாவிருபஃது '' கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி — மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்'' என்பதுமாம். கண்டம்-மிடறு. கறை-விஷம். கார்க்கழல்-வீரத்தின் வலிமை வாய்ந்த காலணி, காற்கழல் என்பதும் பாடம். உழுவை-புலி. புண்டரீகக் கண்ணன்-விஷ்ணு. கொன்றை சிவபெருமானுக்கும் செங்கழுநீர் ஆசாரியருக்கும் அவர் மரபினர்க்கும் உரியன.

கண்ணி 16முதல் 20 வரையில் தருமபுரத்தின் பேருமை கூறப்படுகின்றது. வேதாகமம் வடகலையையும் மூவர்பா முதலியன தேன்கலையையும் உணர்த்தும். 21 ஆவது கண்ணியில் மெய்ஞ்ஞானசம்பந்தன் என ஞானு சாரிய சுவாமிகளின் திருவருள் திருநாமத்தைத் துதிக்கின்ருர். குருவின் அருணேக்கம் பேற்ற ஆநந்த பரவசம் இன்ன தன்மைத்தாம் என்று கூறுவது கவனிக்கத்தககது. (பக். 3-4, வரி. 24-37) பரிபாகி-மலபரிபாகம் உற்றவன். போதம் - தற்போதம். கைவைத்தல் - ஆசாரியன் சேய்யும் பரிசதீட்சை. வேலை-கடல். மால்-மயக்கம் பிரியம். உடல் போருள் ஆவி தருதல்-தற்சுதந்தரம் இன்றி அவற்றைக் குருவுக்கு அர்ப்பணம் செய்தல் இறைபணி நிற்றற்கு முதல் உபாயம். கேட்டுச் சிந்தித்துத் தேளிந்து நிட்டை கூடும் முறை சித்தியாருட் காண்க. ஆணவமலத்தின் சத்தி ஆவாரக சததி அதோங்யாமக சத்தி என இரண்டாம். எம்பிரான்...... உளங்குன்ருன் என்பதுகாறும் பதியியல்புகூறி அதன்பின்னர்ப் பசு இலக்கணம் சாற்றினவர் ஈண்டுப் பாச விலக்கணமும் அதன் நீக்கமும் கூறுகின்ருர். பவம் - பிறப்பு. (பக். 4-5, வரி 38-51) இங்குவரும் உருவகங்கள் போற்றத்தக்கன. யான் - தனுகரணம் ஆகிய அகங்காரம் எனது-புவன போகமாகிய மமகாரம். மலினவுடை-தூலம் முதலிய மூன்று சரீரங்கள். நாதங்கடந்த - பிருதிவிமுதல் நாதம் இறுதியாயுள்ள 36-தத்துவங்கள். ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவதத்துவம் 5, இவற்றின் விரிவை உண்மை விளக்கத்துட்காண்க. கேதம்-துன்பம். (பக். 7-8, வரி 66-79) ஞாதுரு - காண்பான். ஞானம் - காட்சி. ஞேயம் - காணப்படுபோருள். இவை திரிபுடீ என்னப்படும்.

சிவஞானத்தால் ஞாதுரு ஞானஞேயங்கள் போருந்தா வண்ணம் சிவத்தோடு இரண்டறக்கலத்தலாகிய சுத்தாத்துவித நிலை ஈண்டு விவரிக்கப்பட்டது. உதிப்பு ஈறு - பிறப்பு இறப்பு. முத்துலை - தண்ணீர் இறைக்கும் மூன்று துலை. கண்படை - நித்திரை. உளைப்பார் - அழைப்பார்.

தகர்-ஆட்டுக்கடா. (பக். 8-9, வரி 80-93) அரட்டு-பயம். சகலம் கேவலம் சுத்தம் என்ற மூன்று அவத்தைகளை நெஞ்சுவிடுதூது போற்றிப்பஃறொடை முதலியவைகளிற் காண்க. (பக். 9-10, வரி 94-107) ஆறுவகைச் சமயம் சித்தியார் பரபக்ஷம் முதலிய சித்தாந்த நூல்களுட் காண்க. மடங்கல்-சிங்கம். கஞ்சாசனம்-தாமரையாகிய இடம். மூலாதாரம் முதலியவை. அரவு குண்டலிப்பாம்பு. அத்தாணி-கோலுமண்டபம். (பக். 10-11, வரி 108-121) இரணியம்-பொன். துரியம்-சாக்கிராதி அவத்தைகள் ஐந்தனுள் ஒன்று. (பக். 11-12, வரி 122 - 135) 127ஆவது கண்ணியில் தருமையே அநுக்ரகஸ்தானம் என்பதைக் குறிக்கின்றார். 129-138 கண்ணிகள் இவ்வாதீனத்துத் தசாங்கங்களைக் குறிக்கின்றன. மந்திரம் முதலிய ஆறு அத்துவாக்களைச் சித்தியாருட் காண்க. ஐங்கோசம் முன்னர்க் காண்க. (பக். 12-14, வரி 136-149) செங்கோல் - திருவருட் செங்கோல். மாதவர் - உண்மைநெறி விளக்கத்திற்கண்ட தத்துவ ரூபம் முதலிய தசகாரியங்களை உணர்ந்த தம்பிரான்மார்கள். (பஞ்சகலை நிவிர்த்தி முதல் சாந்தியதீதம் வரை உள்ள கலைகள் ஐந்து. (பக். 14, வரி 150-158) கழுதுபிடியுண்டபேர் - இவர் தன்மையைத் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியாருட் காண்க. இன்பம் அநுபவம்-முத்தி நிச்சயத்தை ஆராய்ந்து அனுபவிக்கும் சிவபோகம்.

தமிழ்மணங் கமழுங் கமலையம்பதிவாழ்
ஞானசம்பந்தனை வணங்கில்
ஈனசம் பந்த மில்லைவீ டெளிதே.

---

புனிதவஞ் செழுத்தும் பூதியும் பொலிக.

# பிரதிகளிற்கண்ட பாடபேதம்

| கண்ணி. | பாடம். | பேதம். |
|---|---|---|
| 109 | கோப்புழுபநிடத்து | ... கோப்பு ளகலிடத்து |
| 111 | நீக்கி | ... நீக்கி |
| 112 | விண்டு கழித்தேறு | ... வென்றுகளித் தேறுதற்கு |
| 113 | மோடியபோ தேறி | ... மோட்டியபோ தேறி |
| 114 | பகட்டுப் | ... பகட்டும் |
| 115 | பேய்க்கணங்கடுன்ஞுத் | ... பேய்க்கணங் கண்டுன்ஞுத் |
| ,, | கடந்தசுகமேடை | ... கடந்ததூமேடை |
| 117 | வெளியின்வரச் | ... வெளியினவாச் |
| 118 | வெய்ப்பின் வருவைப்புப் | ... வெய்ப்பினிலே வந்தவைப்புப் |
| 119 | மருடன்னை யுதிப்பித்து | ... மருட்டன்னை நினைப்பித்து |
| ,, | மறப்பித்து | ... மறைப்பித்து |
| 121 | மறந் தின்பந் | ... மறிந் தின்பந் |
| ,, | உதவுந் தாய் | ... உதவு தயா |
| 123 | பிடித்து முத்தந் | ... பிடித்தமுதந் |
| 126 | வண்ணமற்ற | ... வண்மையுற்ற |
| 131 | டாறு வகை | ... டாறத்து வாக் |
| ,, | வாழவைத்த | ... வாழவைக்கு |
| 133 | பங்கயன்சேர் பூமிவை குந்த | ... பங்கயஞ்சேர் பூமிமுத ஞுத |
| 145 | சேர்ந்து, வளை | ... சோர்ந்து, வலை |
| 153 | வேரேறிய | ... வேளேறிய |
| 157 | வெறியாக்கி | ... வெளியாக்கி |
| 158 | கையிற்ருவென்றதனை | ... கையிலரு ளென்றதனை |

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

இலக்கணம் சிதம்பரநாத முனிவர்

இயற்றியருளிய

# க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

---

"உம்பர்பணி ஆரூரன் அருளினால் ஆனந்த
ஒளிவடிவம் ஆனகுரவன்
ஒருசேந்தி லம்பதியில் உன்அருளி னால்பாடும்
உயர்குமர குருபரமுனிக்கு
அம்புயத் தாள் சென்னி சூடினேன் எலிபூனை
அரவுபோத் துக்குயில்கிளி
அத்துவிதம் ஆகவே சத்திநிரு வாணம் எனும்
அருள்ஞான தீட்சைசெய்தோன்
எம்பவம் அகற்றினேன் எண்ணிலா அடியவரை
இன்பவா ரிதியில்வைத்தோன்
எழில்வேள்வி மலையிலோர் அம்பையெங் கேயென்று
இயம்பியே திருமுன்நிற்கும்
சம்பந்த னுக்குஅருள்சேய் என்றுவள் ளிக்குஅருள்சேய்
சைவநா யகன்வருகவே
தருமையம் பதிமுருக ஒருநாலு பாதமும்
தருகுமர குருவருகவே."